Stadtgrün
**Stadt Bern**



# இந்துசமய ஈமச்சடங்கு

இந்துசமயம் எனும் சொல்லுக்குள் பல் சமயப்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது காரணமாக இறுதிச்சடங்குகளிலும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. இவை பிராந்தியத்திற்கு ஏற்ப மற்றும் குடும்ப வழக்கத்திற்கு ஏற்ப மாறுபடும்.

**ஈமச்சடங்கு செயல்முறை**
பொதுவாக இந்துசமய இறுதிச்சடங்கு கீழ்க்காணும் ஒழுங்கில் நடைபெறும்:

- இறந்தவர் உடல் சில நாட்களுக்கு பிறேம்கார்டன் இடுகாட்டில் இறுதி வணக்கத்திற்கு வைக்கப்படும்.
- இறுதிவணக்க நிகழ்வு மூர்ரென்வீதியில் அமைந்திருக்கும் பிறேமம்கார்டன் இடுகாட்டின் தொழுகை மண்டபத்தில் நடைபெறும்.
- ஈமச்சடங்கின் நிறைவில் உடல் தகனம் செய்வதற்கு பேர்ன் தகனறைக்கு எடுத்துச் செல்லப்படும்.
- இறுதி ஊர்வலம் தொழுகை மண்டபத்திலிருந்து எரியறையை கட்டாயம் 15.30 மணிக்குள் வந்தடைய வேண்டும். வரும் வழியில் அமைந்திருக்கும் இறுதிவணக்க கோவிலில் ஆகக்கூடியது 5 நிமிடங்கள் தரித்து நின்று மறைமொழி ஓதி வழிபாடு ஆற்றலாம். தகனம் முடித்து வரும்வழியில் மீளவும் கோவிலில் வழிபாடு ஆற்றலாம். இதற்கு நேரக்கட்டுப்பாடு கிடையாது.

- எரியறைக்கு செல்லும் வழியில் எப்பொருளும் (எ.கா: இலைகள், பூக்கள், அரிசி போன்றன.) நிலத்தில் தூவுதல் ஆகாது.
- எரியறை அடைந்தவுடன் பணியாளர்கள் இறந்தவரைப் பொறுப்பேற்பர். சவப்பேழை சூளைக்கு தயார்ப்படுத்தப்படும். சமயக்குரு இவ்வழியில் கூடச் செல்லலாம்.
- சவப்பேழையில் உள்ள வெளி அலங்காரங்கள் நீக்கப்படும்.
- சவப்பேழை சூளைக்கு தயாராக நிறுத்தப்பட்டதும், நெருங்கிய உறவினர் (ஆகக்கூடியது 10 நபர்கள்) மட்டுமே உள்நுழையலாம்.
- தீமூட்டும் செயல்முறை குடும்பத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரால் ஆற்றப்படலாம்.
- தீமூட்டப்பட்டதும் நிறைவில் செய்யப்படும் கழுவாய் வழிபாடு இறுதிவணக்க கோவிலில் ஆற்றப்படலாம்.
- நீத்தார்தாழிக்குள் இறந்தவரது சாம்பற்பொடி மறுபணிநாளில் பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கும்.

**ஈமைச்சடங்கு தொடர்பான தகவல்கள்**

பிறேம்கார்டன் தொழுகை மண்டபத்தில் நடைபெறும் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் கீழ்க்காணும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்:

- இந்துசமய இறுதிச்சடங்கு நிகழ்வுகள் பணிநாட்களில் 13.00 மணிமுதல் 15.00 மணிவரையும் நடைபெறும். ஊதுபத்தியின் நறுமணம் காரணமாக இச் சடங்குகள் முற்பகல் நடாத்த முடியாது. காற்றுக்குழாய்களை தூய்மிக்க போதியளவு காலம் தேவைப்படும்.
- உற்றார் ஈமச்சடங்கு நாளன்று 12.00 மணிமுதல் சடங்கிற்கு தயார்ப்படுத்தலை செய்ய முடியும்.
- நடைபெறும் பிறரது இறுதிவணக்க நிகழ்வுகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.
- தனிப்பட்ட பொருட்களை, எ.கா. காலணிகள், ஆடைகள், பைகள், ஈமச்சடங்கு முடிந்ததும் எரியறை நோக்கிச் செல்கையில் உங்களுடன் எடுத்துச் செல்லப்பட வேண்டும். தொழுகைமண்டபம் 16.15 மணிக்கு மூடப்படும்.
- இறுதிநிகழ்வில் பங்கெடுப்போர் எண்ணிக்கைக்கு வரையறை கிடையாது.
- வாகனத்தரிப்பிடங்களுக்கு எண்ணிக்கை வரையறை உண்டு. எனவே ஈமச்சடங்கு நிகழ்வில்

பங்கெடுக்க வருகை அளிப்போரை, பொதுப்போக்குவரத்தினை பயன்படுத்தி பயணம்செய்ய கேட்டுக்கொள்ள வேண்டும்.

- இறுதிச்சடங்கு வேளையில் தொழுகை மண்டபத்தில் சவப்பேழை திறந்தபடி இருக்கலாம்.
- தீ மூட்டப்பட்டு அது பரவப்படலாகாது. ஊதுபத்தி மற்றும் மெழுகுதிரிகள் ஏற்றலாம்.
- துக்கம் நோற்கும் சமூகத்தினர் தொழுகைமண்டபத்திற்கு முன்னால் மென்பானங்களையும் உணவுப்பொருட்களையும் எடுத்துவந்து நுகரலாம்.
- மது அருந்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
- சிறப்பு விருப்புக்கள் முற்கூட்டியே இடுகாட்டு இயக்குநருடனும் மற்றும் பராமரிப்பாளருடனும் பேசப்பட்டிருக்க வேண்டும்.

**கட்டணங்கள்**

தகனத்திற்கும் மற்றும் நீத்தார்தாழிக்கும் பேர்ன் எரியறை கணக்கினை அளிக்கும். இறுதிவணக்கத்திற்கு பயன்படுத்தப்படும் அறைக்கும் மற்றும் தொழுகை மண்டபத்திற்கும் பேர்ன் பசுமை நகரம் கணக்கினை வழங்கும். இவ்விலைகளில் கூட்டுவரி 8.1 % உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- பதிவு மற்றும் தகன ஒழுங்கு மற்றும் இறுதிச்சடங்கு

உள்ளூர் மக்கள்: 55.00 பிராங்
வெளியூர் மக்கள்: 55.00 பிராங்

- இறுதிவணக்க அறைகள் ஆகக்கூடியது 3 நாட்களுக்கு

உள்ளூர் மக்கள்: 233.50 பிராங்
வெளியூர் மக்கள்: 259.45 பிராங்

- இறுதிவணக்க அறைகள் மேலதிக பணிநாட்களுக்கு

உள்ளூர் மக்கள்: 77.85 பிராங்
வெளியூர் மக்கள்: 86.50 பிராங்

- இறுதிவணக்க தொழுகை மண்டபப் பயன்பாடு பராமரிப்பு மற்றும் தூய்மித்தல் உட்பட

உள்ளூர் மக்கள்: 281.10 பிராங்
வெளியூர் மக்கள்: 540.50 பிராங்

- வயதுவந்தவர் தகனம் தரநெறிக்குட்பட்ட சவப்பேழை தாழிக்குடுவையுடன்

உள்ளூர் மக்கள்: 603.00 பிராங்
வெளியூர் மக்கள்: 603.00 பிராங்

**இறுதிவணக்க கோவிலில் ஈமவழிபாடு**

மண்டபத்தில் ஈமக்கடன் முடித்து உடலை மின்னெரிமேடைக்கு எடுத்துச் செல்லும் வழியில் பெருந்தேவி காளி உடனாய வைரவர் திருக்கோவில் அமைந்துள்ளது. மறைந்தவர்கள் உடல்களை தகனமிடும் சைவ மற்றும் இந்துசமய சுடுகாடுகளில் காவல் தெய்வமாகவும், வீடுபேறு அளிக்கும் அடையாளமாகவும் காளி மற்றும் வைரவர் திருக்கோவில் அமைவது வழமை. இங்கு பேர்ன் நகரசபையின் நல்கையுடன்

சைவநெறிக்கூடத்தின் கூட்டுப்பணியில் இக்கோவில் அமையப் பெற்றுள்ளது. இக் கோவிலின் நோக்கு, சமயம் கடந்து உற்றார் பிரிவால் வாடும் அனைத்து உள்ளங்களையும் ஆற்றுப்படுத்துதல் ஆகும்.

ஈமச்சடங்கு ஆற்றும் சமயக்குரு அல்லது கொள்ளியிட உரித்துடையவர் உடலை எரியூட்டுவதற்கு முன்னர், இங்கு தரித்து நின்று, கோவிலில் உள்ள தெய்வங்களுக்கும், நீத்தாருக்கும் தீபம் காட்டி, இறை துதி ஓதி வழிபாட்டினை ஆற்றலாம். வழிபாட்டிற்கு உரிய பொருட்கள் கோவிலுக்குள் உள்ளன. உடல் தகனம் முடித்து மீளத் திரும்பும்போது உற்றார், உறவினர்கள் பிரிந்த உயிர் வீடுபேறு அடையவேண்டி கூட்டு வழிபாட்டினை இக்கோவிலில் ஆற்றலாம். மறுநாள் சாம்பல்பொடி பெற்றுக்கொள்பவர் கோவில் முன்றலில், சாம்பல் தாழிக்குடுவையினை வைத்து திருப்பாடல் ஓதி, தீப வழிபாடு ஆற்றி உயிராற்றுப்படுத்தல் வழிபாட்டினை ஆற்றிச் செல்லலாம். வழிபாடுகள் நிறைவடைந்ததும் நீங்கள் எடுத்துவரும் அனைத்துப் பொருட்களையும் அப்புறப்படுத்தி தூய்மித்து (சுத்தம் செய்து) எப்படி கோவில் இருந்ததோ அப்படியே விட்டுச் செல்லுமாறு வேண்டுகின்றோம். கருவறைக்குள் நுழைவதாயின் பாதணிகள் இல்லாமல் உட்செல்லுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

**முகவரி மற்றும் திறந்திருக்கும் நேரம்:**

பிறேம்கார்டன் இடுகாடு
பசுமைநகர் பேர்ன்
Bremgartenfriedhof, Stadtgrün Bern
Murtenstrasse 51, 3008 Bern
031 321 71 11,
bremgartenfriedhof@bern.ch
இடுகாட்டு முகாமை:
திங்கள் முதல் வெள்ளி வரை
09.00 மணிமுதல் 11.30 மணிவரை
13.30 மணிமுதல் 16.30 மணிவரை

பெ.கெ.எப் - பேர்ன் நகர தகனக் கூட்டுறவுக் கழகம், எரியறை பேர்ன்
Weyermannsstrasse 1 / PF 223,
3000 Bern 5
031 387 20 20, bgf@krematorium.ch
திங்கள் முதல் வியாழன் வரை
09.00 மணிமுதல் 11.30 மணிவரை
13.30 மணிமுதல் 17.00 மணிவரை
வெள்ளி
09.00 மணிமுதல் 11.30 மணிவரை
13.30 மணிமுதல் 16.00 மணிவரை